


**21. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டு மக்கள் அனைவரும் யோக பயிற்சியை வாழ்நாள் பயிற்சியாக கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. நாடுமுழுவதும் இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் மறுதேர்வு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

3. கல்வி நிறுவனங்களில் மாணாக்கருக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் எச்சரித்துள்ளார்.

4. நீலகிரி கோவை தேனி திண்டுக்கல் கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

5. ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

************

யோகா

நாட்டு மக்கள் அனைவரும் யோக பயிற்சியை வாழ்நாள் பயிற்சியாக கடைபிடிக்க வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி அறிவுறுத்தியுள்ளார்.

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி கொல்கத்தாவில் நடைபெற்ற பிரம்மாண்ட யோகா நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், யோகாவால் உடலும் மனமும் ஒருங்கிணைந்து ஆரோக்கியம் மேம்படும் என்றார்.

இன்றைய வேகமான உலகில் ஒழுக்கம் விழிப்புணர்வு மற்றும் சமநிலையுடன் வாழ்வதற்கான வழிமுறைகளை யோகா கற்பிப்பதாக கூறினார்.

"ஆரோக்கியமான முதுமைக்கு யோகா" என்ற இந்தாண்டின் கருப்பொருளின் அடிப்படையில் மத்திய கலாச்சார அமைச்சகம் சார்பில் நாடுமுழுவதும் உள்ள 100 முக்கிய இடங்களில் சிறப்பு யோகா கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

புதுதில்லியில் – செங்கோட்டை, உத்திரகாண்ட்டின் - ஹரித்துவார், தமிழ்நாட்டின் –மாமல்லபுரம், கர்நாடகாவின் – ஹம்பி, லடாக்கின் – லே, தெலங்கானாவின் – ஹைதராபாத் உள்ளிட்ட இடங்களில் இன்று நடைபெற்ற யோகா நிகழ்வுகளில் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூர் யோகா நிகழ்வில் உரையாற்றிய குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டின் பாரம்பரிய கலையாக யோகா திகழ்கிறது என்றார்.

ஆரோக்கியமான குடும்பம் சமூகம் மற்றும் தேசத்தை கட்டமைக்க யோகா பெரிதும் உதவுவதாகவும் தெரிவித்தார்.

லடாக் லே பகுதியில் நடைபெற்ற யோக நிகழ்ச்சியில் பங்கேற்ற குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இந்திய நாகரிகத்தின் அடையாளமாக திகழும் யோகா உடல் மனம் மற்றும் ஆன்ம நலனுக்கான பயிற்சி என்று கூறியுள்ளார்.

ஆரோக்கியமான முதுமை காலத்தை வழிநடத்த யோகா பெரும் பங்காற்றும் என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் கிழக்கு வான்படை தலைமையகத்தில் நடைபெற்ற யோகா தின கொண்டாட்டங்களில் உரையாற்றிய அவர், யோகாவை வாழ்க்கை முறையாக கடைபிடிக்க உறுதி ஏற்க வேண்டும் என்று கூறினார்.

மாமல்லபுரத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் ஆரோக்கியமான மகிழ்ச்சியான சமுதாயத்தை உருவாக்க ஒவ்வொருவரும் யோகாவை வாழ்வின் அங்கமாக மாற்ற வேண்டும் என்றார்.

உலகம் முழுவதும் 210-க்கும் மேற்பட்ட இந்திய தூதரகங்கள் உள்ளிட்ட 2 ஆயிரத்து 500 இடங்களில் யோகா நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் யோகா சிறப்பு பயிற்சிகள் நடைபெற்றன.

திருப்பூரில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.அருண்ராஜ் பங்கேற்றார்.

தர்மபுரியில் பள்ளி கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற யோக பயிற்சியின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

தஞ்சை பெரியகோவில் வளாகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற யோகா பயிற்சியில் கலந்துகொண்ட மாணவர் இப்பயிற்சி தமக்கு பெரிதும் ஊக்கமளித்ததாக கூறினார்.

வாய்ஸ்

நாமக்கல் அரியலூர் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்களில் நடைபெற்ற யோக பயிற்சியில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் ஈடுபட்டனர்.

தூத்துக்குடி முத்துநகர் கடற்கரை பூங்காவில் தேசிய மாணவர் படை அதிகாரிகள் மற்றும் பள்ளி கல்லூரி மாணாக்கர் கலந்துகொண்டு வஜ்ஜிராசனம், திரிகோண ஆசனம், சூரிய நமஸ்காரம் உள்ளிட்ட 25 ஆசனங்களை நிகழ்த்தினர்.

விழுப்புரம் செஞ்சி கோட்டை பூங்காவில் அஞ்சல் துறை சார்பில் நடைபெற்ற யோகா பயிற்சியில் ஏராளமான பள்ளி மாணாக்கர் தொல்லியல் மற்றும் அஞ்சல் துறை ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

சேலம் ரயில்வே கோட்ட அலுவலக வளாகத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் கோட்ட மேலாளார் பண்ணாலால் தலைமையில் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள், சாரணர் படை மாணாக்கர் உள்ளிட்டோர் யோக பயிற்சியில் ஈடுபட்டனர்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் ராணுவ பயிற்சி மையத்தில் ராணுவ அதிகாரிகள் குடும்பத்துடன் யோகாசன முத்திரைகளை செய்து காண்பித்தனர்.

வேலூர் கோட்டை பூங்காவில் இன்று நடைபெற்ற யோகா பயிற்சியில் தொல்லியல் துறை அதிகாரிகள் பள்ளி கல்லூரி மாணாக்கர் உள்ளிட்டோர் யோக பயிற்சியை மேற்கொண்டனர்.

************

நீட்

M.B.B.S., B.D.S. உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் மறுதேர்வு நாடுமுழுவதும் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் நீட் மறு தேர்வு சுமூகமாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழ் ஆங்கிலம் இந்தி உள்ளிட்ட 12 மொழிகளில் நடைபெறும் இத்தேர்வை நாடுமுழுவதும் 551 நகரங்களில் 22 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் எழுதுகின்றனர்.

தமிழகத்தில் சென்னை கோவை திருச்சி உள்ளிட்ட 31 மாவட்டங்களில் 307 தேர்வு மையங்களில் நடைபெறும் இத்தேர்வை ஒரு லட்சத்து 42 ஆயிரம் பேர் எழுதுகின்றனர்.

திருச்சி மாவட்டத்தில் ஆறாயிரத்து 688 பேர் தேர்வு எழுதுகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் 13 தேர்வு மையங்களில் நடைபெறும் இத்தேர்விற்கான அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளது.

மத்திய தொழில் பாதுகாப்பு படைகள் மற்றும் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மாணாக்கர் ஆபரணங்கள் உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ஹால்டிக்கட் உள்ளிட்ட ஆவண சரிபார்ப்பிற்கு பின்னர் தேர்வறைக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

************

அஷ்விணி வைஷ்ணவ்

நாடுமுழுவதும் ரயில்வே நவீன மயமாக்கல் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதன்படி ஆயிரத்து 300 ரயில் நிலையங்களில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

எல்லை பகுதிகளில் ரயில்வே கட்டமைப்பை உருவாக்கும் திட்டத்திற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் இதன்மூலம் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ரயில் இணைப்பு வழங்கப்படுவதோடு தேசிய பாதுகாப்பும் வலுப்படுத்தப்படும் என்றார்.

************

சர்பானந்த சோனோவால்

8.6 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யுடன் ஹார்மோஸ் நீரிணையை கடந்து 3 இந்திய கப்பல்கள்

இந்தியாவிற்கு வந்துகொண்டிருப்பதாக மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் இந்தியாவின் கடல் சார் பாதுகாப்பிற்கு அரசு உயர் முன்னுரிமை அளித்துவருவதாக குறிப்பிட்டார்.

************

பிரிக்ஸ்

பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாடு புதுதில்லியில் நாளை நடைபெறுகிறது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித்தோவல் தலைமையில் நடைபெறும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் பிரேசில் ரஷ்யா சீனா, ஈரான் உள்ளிட்ட உறுப்பு நாட்டு பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

உலகம் எதிர்கொள்ளும் மரபு சாரா பாதுகாப்பு சவால்கள் என்ற தலைப்பிலான மாநாட்டில் தீவிரவாத எதிர்ப்பு, தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டில் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

************

ராஜ்மோகன்

தமிழகத்தில் பள்ளி, கல்லூரிகளில் ரீல்ஸ் எடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் எச்சரித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணாக்கருக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலான செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டார்.

************

வினோத்

தஞ்சை மாவட்டம் பட்டிஸ்வரத்தில் நெல் கொள்முதல் நிலையத்தில் மழையில் நனைந்த நெல் மூட்டைகள் பிரிக்கப்பட்டு அரவை ஆலைகளுக்கு அனுப்பப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு.வினோத் தெரிவித்துள்ளார்.

கொள்முதல் நிலையத்தில் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்ட அவர், நெல் மூட்டைகளை பாதுகாக்கும் வகையில் உரிய அளவு தார் பாய்களை தட்டுப்பாடின்றி வைத்திருக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

************

நயினார் நாகேந்திரன்

தமிழகத்தில் போதை பொருள் புழக்கமும், குற்றச்சம்பவங்களும், தொடர்ந்து அதிகரித்து வருவதாக

பி.ஜே.பி. மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டம் ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்ள அரசு கால அவகாசம் எடுத்துக்கொள்ள கூடாது என்றார்.

அரசால் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாவது தடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

************

கும்பகரை

தேனி கும்பக்கரை அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு இன்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

இருவரி

மதுரையில் போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.விஸ்வநாதன் இன்று தொடங்கிவைத்தார்.

சேலம் பேருந்து நிலையத்தில் மாநகராட்சி ஆணையர் திரு.லலித் ஆதித்ய நீலம் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

அங்குள்ள சுகாதார வளாகங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

************

விபத்து

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அடுத்த குன்னூரில் திருமண வீட்டினர் சென்ற பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 40 பேர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஜகதீஸ்வரி சந்தித்து ஆறுதல் கூறினார்.

************

வானிலை

வளிமண்டல காற்றழுத்த சுழற்சி காரணமாக நீலகிரி கோவை தேனி திண்டுக்கல் கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

************

கோவில்

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் திருக்கோவில் ஆனி திருமஞ்சன தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெறுகிறது.

ஏராளமான பக்தர்கள் தேரை வடம்பிடித்தனர்.

ஆனி திருமஞ்சன உற்சவ தரிசனம் நாளை மறுநாள் நடைபெறும்.

************

மகளிர் கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இரவு 7 மணிக்கு தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

************

கால்பந்து

FIFA உலக கோப்பை கால்பந்து போட்டியில் இன்று ஜப்பான் - டுனிஷியாவை 4-0 என்ற கோல் கணக்கிலும்,

ஜெர்மனி ஐவெரிகோஸ்ட்டை 2-1 என்ற கோல் கணக்கிலும் வென்றன.

ஈக்வடார் – க்யூராச்சவ் இடையேயான போட்டி ட்ராவில் முடிவடைந்தது.

ஸ்பெயின் – சவுதி அரேபியாவை இன்று இரவு எதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது